## கம்பம் நகராட்சி

**2020–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் (31.08.2020) ஆம் நாள் திங்கள் கிழமை பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

**1.** நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பொறுப்பு) அவர்களின் 08/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் பதிவு செய்யலாம்.

**2.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2047, நாள். 30.06.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நிதி 2020–2021** கள்ளர் பள்ளி வடக்கு பக்கம் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை, கழிப்பறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2,00,000/– | கே.சி. போஸ் | – | 0.51 |
| | | | வி. கிருஷ்ணன் | 1.04 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.51 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**3.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2047, நாள். 30.06.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நிதி 2020–2021** கம்பம்மெட்டு காலனியில் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் குடியிருப்பு, சுற்றுச்சுவர் மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 4,00,000/– | கே.சி. போஸ் | – | 0.57 |
| | | | வி. கிருஷ்ணன் | 1.18 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.57 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2047, நாள். 30.06.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நிதி 2020–2021** மணிநகர் மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை , கழிவறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2,00,000/– | கே.சி. போஸ் | – | 0.51 |
| | | | வி. கிருஷ்ணன் | 1.04 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.51 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**5.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2047, நாள். 30.06.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **குடிநீர் நிதி 2020–2021** ஏகலூத்து ரோடு டி.எஸ்.கே. நகர் லே–அவுட்டில் உள்ள மேல்நிலை தொட்டி வளாகத்தில் காவலர் அறை கழிவறை மற்றும் நடைபாதை அமைக்கும் பணி | 2,00,000/– | கே.சி. போஸ் | – | 0.51 |
| | | | வி. கிருஷ்ணன் | 1.04 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.51 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**6.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2045, நாள். 30/06/2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி, கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 07.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **பொதுநிதி 2019–2020** வார்டு எண். 17 அம்பேத்கார் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் செய்தல் | 1,00,000/– | வி. கிருஷ்ணன் | 1.44 | – |
| | | | கே.சி. போஸ் | – | 0.37 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. கே.சி. போஸ், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.37 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**7.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 1966, நாள். 25.02.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 28.08.2020–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | **பொதுநிதி 2019–2020** நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திறந்தவெளியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலங்களில் இரும்பு வலை கிரில் மற்றும் இரும்பு மூடி அமைக்கும் பணிகள் செய்தல் | 1,00,000/– | வி. கிருஷ்ணன் | – | 0.45 |
| | | | எல். ராஜேந்திரன் | 1.75 | – |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு. வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர், கம்பம் அவர்கள் 0.45 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**8.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் கடிதம் ந.க.எண். 2043/2008/பி1, நாள். 07.02.2020ம் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக காணொலி காட்சியரங்கத்திற்கு தேவையான மின்கலன்களுடன் கூடிய தடையில்லா மின்வழங்கிகள் விநியோகம் செய்து பொருத்திட வேண்டியுள்ளதால் மேற்காணும் பணிகள் செய்திடவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. **1,00,000/–**க்கும், மேற்படி செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

**9.** கம்பம் நகராட்சி 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி, **68,090** ஆகும். இந்நகராட்சியானது 1958–ம் ஆண்டு முதல் முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் 103.52 கி.மீ நீளம் சாலைகள், சுமார் 185 எண்ணம் தெருக்களை உள்ளடக்கியது ஆகும். கம்பம் நகராட்சியின் அருகில் அண்டை மாநிலமான கேரளா சுற்றுலா ஸ்தலமாக உள்ளதாலும், மேலும் அவ்விடம் விளையும் தேயிலை, ஏலக்காய், மிளகு, தேங்காய்.., போன்ற மக்களின் அத்தியாவசிய பொருள்களை வெளியூர் சந்தை விற்பனைக்காக தினந்தோறும் கம்பம் நகருக்குள் சுமார் 20,000 நபர்கள் வந்து செல்கின்றனர்.

கம்பம் நகராட்சியின் மூலம் ஏற்கனவே பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக சுருளிப்பட்டி அருகே ஆற்றுப்படுகையில் தலைமை நீரேற்று நிலையம் 2013 – 14–ல் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சுமார் நாள் ஒன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் குடிநீர் நீருந்து மூலம் எடுக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில், கம்பம் நகர் மக்களுக்கு அரசு விதிகளின் படி, நாள் ஒன்றுக்கு 90 lpcd குடிநீர் விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2012–13 ஆம் ஆண்டு கம்பம் நகருக்கு மட்டும் தனியாக நகராட்சி எல்லையில் இருந்து சுமார் 18.00 கி.மீ தொலைவில் உள்ள முல்லைபெரியார் ஆற்றுப்படுகையில் லோயர்கேம்ப் பகுதியில் இருந்து குடிநீர் அபிவிருத்தி திட்டம் உருவாக்கி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் முடிவுற்று ஓர் ஆண்டு காலம் சோதனை ஓட்டம் முடித்து 17.04.2020– ல் லோயர்கேம்ப் தலைமை நீரேற்று நிலையத்தை, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை நகராட்சியே செய்திட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் கம்பம் நகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் விநியோகத்தில் கீழ்கண்ட மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் ஏற்றம் செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவைகள் விபரம் கீழ்கண்டவாறு,

## I. மேல்நிலை தொட்டி விபரம் :– ( Overhead water tanks)

| வ.எண் | மேல்நிலை/தரைமட்ட தொட்டி விபரம் | கொள்ளளவு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | நந்தகோபால்சாமி தெரு மேல்நிலைத் தொட்டி | 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 2. | நந்தகோபால்சாமி தெரு தரைமட்ட தொட்டி | 3.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 3. | காந்திநகர் மேல்நிலைத் தொட்டி | 2.50 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 4. | மணிநகரம் (T.S.K. layout) மேல்நிலைத் தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 5. | T.S.K. layout ( ஏகலூத்து ரோடு) மேல்நிலைத் தொட்டி | 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 6. | கம்பம்மெட்டு காலனி மேல்நிலைத் தொட்டி | 1.60 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 7. | தாத்தப்பன்குளம் (நகராட்சி பள்ளி வளாகம்) மேல்நிலைத் தொட்டி | 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 8. | விவேகானந்தர் தெரு –சுப்பிரமணிசாமி கோவில் தெரு சந்திப்பு மேல்நிலைத் தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 9. | உலகத்தேவர் தெரு கள்ளர்பள்ளி வடபுறம் மேல்நிலைத்தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 10 | நகராட்சி வாரச்சந்தை மேல்நிலைத்தொட்டி | 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
| 11. | L.F. ரோடு RMTC வடபுறம் மேல்நிலைத் தொட்டி | 0.30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு |

மேற்கண்ட 10 இடங்களில் உள்ள மேல்நிலைத் தொட்டிகளை தினசரி பராமரிப்பு பணிகள் செய்திட நகராட்சியில் போதுமான பணியாளர்கள்,பணியிடங்கள் இல்லை. மேலும், இந்நகராட்சி மூலம் பராமரிக்கப்படும் குடிநீர் குழாய்கள் விபரம் பின்வருமாறு.,

## II) பிரதான குடிநீர் குழாய் :– (Pumping main)

| வ. எண் | பிரதான குடிநீர் குழாய் விபரம் | பிரதான குழாயின் விட்டம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|---|
| a) | River to Raw Water Tank (Pumping main) | 400 mm Φ DI pipe | 0.651 Km |
| b) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 400 mm Φ DI pipe | 14.504 km |
| c) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 350 mm Φ DI pipe | 1.426 km |
| d) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 250 mm Φ DI pipe | 0.305 km |
| e) | Gravity main (Lower filter bed to Cumbum municipal limit) | 150 mm Φ DI pipe | 0.150 km |
| | Feed main and Branch Feeder main | 250 mm Φ DI pipe | 0.098 km |
| | Feed main and Branch Feeder main | 200 mm Φ DI pipe | 1.120 km |
| | Feed main and Branch Feeder main | 150 mm Φ DI pipe | 2.806 km |
| | Feed main and Branch Feeder main | 100 mm Φ DI pipe | 0.535 km |
| | | **Total** | **21.595 km** |

**III) குடிநீர் பகிர்மான குழாய் (Distribution main)**

| வ.எண் | பகிர்மான குழாய் விபரம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | 300 mm Φ AC pipe | 2.00km |
| 2 | 250mm Φ AC pipe | 5.00km |
| 3 | 150mm Φ AC pipe | 15.00km |
| 4 | 140mm Φ AC pipe | 30.00km |
| 5 | 110mm Φ PVC pipe | 30.00km |
| 6 | 90mm Φ PVC pipe | 20.00km |
| | **Total** | **102.00km** |

ஆகமொத்தம் நகராட்சி மூலம் 123.595 கி.மீ நீளம் குடிநீர் குழாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**IV) குடிநீர் குழாய் வால்வுகள்:– ( Valves)**

| வ.எண் | வால்வு வகை | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | **சுலீஸ் வால்வ் (Sluice Valve)** | |
| | 250mm | 2No’s |
| | 200mm | 2No’s |
| | 150mm | 5No’s |
| | 100mm | 3No’s |
| 2. | **ஏர் வால்வ் (Air Valve)** | |
| | 50mm double air valve/150mm | 3No’s |
| | 50mm double air valve/200mm | 3No’s |
| | 80mm double air valve/200mm | 3No’s |
| | 100mm double air valve/400mm | 18 No’s |
| 3. | **ஸ்கவர் வால்வ் (Scour Valve)** | |
| | 250 mm double air valve/400m DI | 6 No’s |
| 4. | **கேட் வால்வ் (Gate valve)** | |
| | 90 mm Gate valve | 99 No’s |
| | 125 mm Gate valve | 9 No’s |

மேற்கண்ட விபரப்படி பிரதான குடிநீர் குழாய் மற்றும் பகிர்மான குடிநீர் குழாய் மற்றும் வால்வுகள் மூலம் கம்பம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கம்பம் நகராட்சி குடிநீர் பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் சுகாதார பிரிவு மூலம் உள்ள தூய்மை பணியாளர்களை கொண்டு இயக்குவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17.04.2020 அன்று லோயர் கேம்ப் தலைமை குடிநீர் நிலையத்தை நகராட்சியிடம் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகளை செய்ய ஒப்படைப்பு செய்ததால் நாளது தேதி முதல் நகராட்சியே குடிநீர் விநியோகத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டி உள்ளதால், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் தனியார் நிறுவனம் மூலம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகள் செய்வதற்கு கீழ்கண்டவாறு அட்டவணை கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கம்பம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் 2020

### I. கம்பம் நகராட்சிக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வழங்க ஆகும் செலவு தொகை (மின் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| 1. | மாதந்தோறும் பராமரிப்பு மற்றும் குடிநீர் கட்டணங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரும் தொகை **(தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் அவர்களின் கடித எண்: கோ.கம்பம் குடிநீர்/ வஅ/கிகுதி/தேனி/2020 நாள் : 17.04.2020)**<br>ஒரு மாதத்திற்கு செலவினம் ரூ. 15.00 இலட்சம்<br>ஆண்டு ஒன்றுக்கு செலவினம் ரூ. 180.00 இலட்சம் |

### II. நகராட்சி நிர்வாகம் மூலம் குடிநீர் பராமரிப்பு செய்திட வருடாந்திர செலவு அரசானை எண். 198, நாள். 26.10.1998 ( மின் கட்டணம் உட்பட)

| | | |
|---|---|---|
| 1. | உதவியாளர் (365 x 426) | 1 |
| 2. | வடிகட்டி படுகை இயக்குபவர்<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 3. | தலைமை நீரேற்று நிலைய பொருத்துநர் | 1 |
| 4. | எலக்ட்ரீஷியன் Grade I<br>( 8 Hrs per day one person ) | 3 |
| 5. | மின்னியல் கண்காணிப்பாளர் | 1 |
| 6. | காவல்காரர் | 1 |
| 7. | நகர் பகுதியிலுள்ள மேல்நிலை தொட்டி காவலர் | 20 |
| 8. | வால்வு இயக்குபவர் | 8 |
| | **ஒரு ஆண்டிற்கு பணியாளர் ஊதியம் + குளோரின் சிலிண்டர் (GST உட்பட)** | **ரூ. 75. 00 இலட்சம்** |

மேற்கண்ட விபரப்படி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி லோயர்கேம்ப் குடிநீர் திட்டத்தை பராமரிப்பு செய்ய **ரூ. 75.00 இலட்சத்திற்கு** மின் கட்டணம் உட்பட மன்ற அனுமதி 2045/30.06.2020ல் பெறப்பட்டது. ஆனால் தற்போது நிர்வாக நலன் கருதி மின்கட்டணம் தவிர்தது **ரூ. 44.00 இலட்சத்திற்கு** கீழ்கண்டவாறு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து மேற்படி குடிநீர் திட்டத்தை பராமரிக்கலாம்.

### III. கம்பம் நகராட்சி மூலம் வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரி லோயர்கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்புக்கு தேவையான பணியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | கள மேற்பார்வையாளர் (DCE, DEE) | 1 |
| 2 | எலக்ட்ரீஷியன் Grade I | 3 |
| 3 | வடிகட்டி இயக்குபவர் | 3 |
| 4 | காவல்காரர் | 12 |
| | **மொத்த பணியாளர்கள்** | **19** |

மேற்படி 19 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு ஏதுவாக, ரூபாய் 44.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி மண்டல செயற்பொறியாளர் அவர்கள் மூலமாக தலைமை பொறியாளர் ஒப்புதல் பெற்று வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொதுமக்களின் குடிநீர் தேவையின் அவசியம் கருதி, நகராட்சி நிர்வாக நலன் கருதியும் தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிகள் செய்திட, சென்னை நகராட்சி தலைமை பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**10.** கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 02, எல்.எப்.ரோடு, காந்திநகர் மேல்நிலைத் தொட்டி செல்லும் குறுக்கு தெருவிலுள்ள புங்கை மரத்தின் வேர்பகுதியினால் நகராட்சி மழைநீர் வடிகால் மற்றும் அருகில் உள்ள குடியிருப்பு கட்டிடம் சேதமடைவதால் அம்மரத்தினை வெட்டி அப்புறப்படுத்திட உத்தமபாளையம், சார் ஆட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 5987/2018/அ4, நாள். 27.02.2019 உத்திரவில் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 133(1)(ஈ)ன்படி, பொது ஏலம் விட்டு வெட்டி அகற்றிட நகராட்சி ஆணையர் அவர்களுக்கு அதிகாரம் அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி , காந்திநகர் மேல்நிலைத் தொட்டி செல்லும் குறுக்கு தெருவிலுள்ள புங்கை மரத்தினை வெட்டி அப்புறப்படுத்த 30.06.2020 அன்று பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. அதன்பின் 27.08.2020 அன்று மறு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் 3 நபர்கள் பொதுஏல வைப்புதொகை செலுத்திஏலம் கோரியுள்ளனர். ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை.

| வ.எண். | ஏலதாரர் பெயர் / முகவரி திருவாளர்கள் | உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|
| 1. | திரு. சி. பாண்டியன்,<br>வார்டு–31 சுக்காங்கல்பட்டி தெரு, கம்பம் | ரூ. 3,700/– |
| 2. | திரு. பி. பாஸ்கரன்,<br>வார்டு –31, சுக்காங்கல்பட்டி தெரு, கம்பம் | ரூ. 3,800/– |
| 3. | திரு. எஸ். வடமல்ராஜ்,<br>டி.டி.வி. தினகரன் நகர், கம்பம் | ரூ. 3,600/– |

உயர்ந்தபட்ச பொது ஏலக்கேள்வியினை முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** பொதுஏலத்தில் திரு. பி. பாஸ்கரன், வார்டு எண். 31, சுக்காங்கல்பட்டி தெரு, கம்பம் என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஏல கேள்வியினை மன்றம் ஏற்கலாம்.

**11.** கம்பம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2018–19ன் கீழ், முதல்நிலை குப்பை சேகரம் செய்யும் பணிக்கு 31 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் வாகனம் (Battery Operated Vehicle) வாங்கப்பட்டு பொதுசுகாதார பிரிவில் பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுப்பணிகளை சரிசெய்து, பயன்பாட்டில் தொடர்ந்து இருக்கும் வகையில் தனியார் மூலம் மேற்படி வாகனங்களை ஆண்டு பராமரிப்பு பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்ட நிலையில் , மேற்படி காலங்களில் கொரோன தொற்று காரணமாகவும், ஊரங்கு அமுலிலில் இருந்த காலங்களில் பராமரிப்பு பணிகள் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் நலன் கருதி, சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற வேண்டியுள்ளதால் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களில் அவ்வப்பொழுது ஏற்படும் சிறு சிறு பழுதுப்பணிகளை சரிசெய்வது அவசியமாவதால், 01.11.2020–ல் இருந்து பேட்டரி மூலம் இயங்கும் வாகனத்திற்கான ஆண்டு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக முன்கூட்டியே ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 6.40/– இலட்சம் செலவினத்தில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**12.** இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 2048, நாள். 30.06.2020 இல் கீழ் காணும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் படி கீழ் காணும் திட்டப்பணி மேற்கொள்ள 14.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள். | கூடுதல் % | குறைவு % |
|---|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி 2019–2020</u><br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள நவீன எரிவாயு தகன மேடையில் பழுதாகியுள்ள உபகரணங்களை மாற்றுதல் மற்றும் பழுதுகள் சரிசெய்தல் | 3,00,000/– | திரு. டி. சங்கர், எஸ்.எஸ். இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை | – | 1.22 |
| | | | திரு. எஸ். அருண்குமார், எவர் ஷைன் பி.இ.பி & ரூபிங், திண்டுக்கல் | 2.55 | – |

**அலுவலகக் குறிப்பு : –** 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட திரு.டி. சங்கர், எஸ்.எஸ். இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சென்னை ஒப்பந்ததாரர் 1.22 சதவிகிதம் குறைவாக வழங்கிய ஒப்பந்தப் புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஆணையர்(பொ) மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**13.** இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால்சாமி நகர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து சேகரம் ஆகும் குப்பைகளை தரம் பிரிக்க ஏதுவாக வளமீட்பு மையம் அமைக்கப்படவேண்டியுள்ளது. எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட நந்தகோபால்சாமி நகர் பூங்கா வளாகத்தில் நுண்உர செயலாக்க மையம் (MCC) அமைந்துள்ள இடத்தின் உட்புறத்தில் , வளமீட்பு மையம் (Resource Recovery Centre) மற்றும் சிமெண்ட் தளம் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. **9,50,000/–**(ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) –ல் பணிகள் மேற்கொள்ளவும், ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

**14.** இந்நகராட்சி நகர் மன்ற தீர்மான எண்**1904** நாள் **31.12.2019**ம் தேதிய தீர்மானத்தில் நகரில் தெருவிளக்கு வசதி இல்லாத தெருவிக்குகளில் புதிதாக **70** இடங்களில் **30**W திறன் கொண்ட LED விளக்குகள் மின் வாரிய உதவியோடு நிறுவிட ரூபாய் **4.95** இலட்சம் அனுமதி பெறப்பட்டது.மேற்படி **70** இடங்கள் தேர்வு செய்து,கம்பம் மின்வாரிய வடக்கு பிரிவு அலுவலகத்திற்கு **33** விளக்குகள் அமைக்க உரிய மதிப்பீட்டுத் தொகை ரூபாய் **179039/–**ஐ, வடக்குப்பிரிவு உதவி மின்பொறியாளர் **27.07.2020**ம் தேதிய **181/2020**ம் எண்ணிட்ட கடித்தில் கோரிய படி **5.8.2020**ம்தேதி செலுத்தப்பட்டது**.** தற்போது மின் வாரிய நகர் பிரிவுக்குட்பட்ட **37** இடங்களில் விளக்குகள் பொருத்த உரிய விரிவாக்க மதிப்பீட்டுத்தொகை ரூ. **281974/–** செலுத்துமாறு மின் வாரிய கம்பம் நகர்பிரிவு உதவி மின் பொறியாளர் **24.8.2020** ம் தேதிய **116** ம் எண் கடிதத்தில் தெரிவித்தள்ளார். அதன்படி புதிய தெருவிளக்குகள் அமைக்க கீழ்கண்ட விபரப்படி கூடுதல் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | விபரம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | 31.12.2019 ம் தேதிய 1904 ம் எண் தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்ட தொகை | 495000.00 |
| 2 | கம்பம் மின் வாரிய வடக்கு பிரிவிற்கு செலுத்திய மதிப்பீட்டு தொகை | 179039.00 |
| 3 | கம்பம் மின் வாரிய நகர் பிரிவிற்கு செலுத்த வேண்டிய மதிப்பீட்டு தொகை | 281974.00 |
| 4 | பொருத்து பொருட்கள் வாங்க மதிப்பீட்டு தொகை | 310000.00 |
| 4 | கூடுதல் செலவினத் தொகை | 276013.00 |

**அலுவலகக் குறிப்பு : –** அனுமதிக்கப்பட்ட தொகைபோக கூடுதல் செலவினத்தொகை ரூ. 2,76,013/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**15.** இந்நகராட்சி வார்டு எண் 20 கொண்டிதொழு தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள மேல்நிலை தொட்டியினை அகற்றிட நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் கடித எண் 1778/2020/பி2/நாள் 18.06.2020ன் படி பழுதடைந்த மேல்நிலை தொட்டியினை மேல்மட்டத்தை இடித்து Mini power Pump அமைத்திட அதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூபாய் 1,00,000/–க்கும் பணிகள் செய்திட 17.08.2020ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பட்டுள்ளதை மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி விபரம் | மதிப்பீட்டைவிட | |
|---|---|---|---|
| | | சதவீதம் குறைவு | சதவீதம் கூடுதல் |
| 1. | திரு.எல்.ராஜேந்திரன் | –0.06 | – |
| 2. | திரு.வி.கிருஷ்ணன் | – | 0.11 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட –0.06 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.எல்.ராஜேந்திரன் என்பவரது ஒப்பந்தபுள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**16.** இந்நகராட்சியில் 2020–2021ஆம் நிதியாண்டில் ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் பிடித்தம் செய்யும் SGST மற்றும் CGST மற்றும் சேவைவரி சம்மந்தமான E-File செய்வதற்கும், சலான் தயாரித்து தருவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ. 50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) திரு. வி. விருமாண்டி, பட்டைய கணக்கருக்கு மேற்கண்ட தொகை வழங்குவதற்கும், தற்போது மன்ற முன் அனுமதி எதிர்நோக்கி 2/2020 முதல் 7/2020 வரையிலான காலங்களுக்கு கட்டணம் ரூ. 6,018/–ஐ வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**17.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு 7, நேருஜி வீதி, வார்டு A, பிளாக்–35, நகரளவை எண். 74 மற்றும் 88–இல் அனுமதியற்ற கட்டுமானம் மற்றும் தெருவில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக திரு. ஆர். சத்தியநாராயணன் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை, உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். WP (MD) No.8558/2020–இல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு. கே. ஹேமகார்த்திகேயன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்தியதற்கான செலவினத்தொகை ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** அவசர, அவசியம் கருதி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
( ந.க.எண். 1860/2020/எப்1)

**18.** இந்நகராட்சிக்கு சொந்தமான மினி லாரி எண். TN. **60** Y 1959-க்கு புதிய பேட்டரி வாங்குவதற்கு **07.08.2020–**ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | பேட்டரி ஒன்றின் விலை ரூ. |
|---|---|---|
| 1. | திரு. பி. முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 24,950/ |
| 2. | திரு. S. முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 25,100/ |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 1774/2020/எச்1)

**19.** தனி அலுவலரின் முன் அனுமதியின் படி, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN. **60** T 4507 டிப்பர் லாரிக்கு 10.08.2020–உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், 07.08.2020–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1. | திரு. பி. முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்,<br>நகராட்சி எதிர்புறம், கம்பம். | 1,59,950/ |
| 2. | திரு. S. முருகன்,<br>ஸ்ரீ சாய்ராம் ஸ்பிரே பெயிண்டிங் ஒர்க்ஸ், கம்பம். | 1,66,450/ |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. பி. முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல், நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 1773/2020/எச்1)

**20.** இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் 2020–2021 ஆம் ஆண்டிற்கு இன்சூரன்ஸ் கட்டண தொகை செலுத்தக்கோரி வரலான ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியின் கடிதத்தின்படி ரூ. 2,70,923/–ஐ செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | TN.60T4504 | ரூ. 32,535/– |
| 2 | TN.60T4507 | ரூ. 32,535/– |
| 3 | TN.60T4524 | ரூ. 32,535/– |
| 4 | TN.60Z.3591 | ரூ. 32,535/– |
| 5 | TN.60 Y 1959 | ரூ. 19,682/– |
| 6 | TN.60 AW 8375 | ரூ. 20,139/– |
| 7 | TN.60 AW **8353** | ரூ. 20,139/– |
| 8 | TN.60 AW 8347 | ரூ. 20,139/– |
| 9 | TN.60 AV **2490** | ரூ. 20,228/– |
| 10 | TN.60 AV 2482 | ரூ. 20,228/– |
| 11 | TN.60 AV 2496 | ரூ. 20,228/– |
| | | ரூ. 2,70,923/– |

**அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். **1873/2020**/எச்**1**)

ஒப்பம்/— திருமதி. இ. செல்வராணி
ஆணையாளர்(பொ),
கம்பம் நகராட்சி.

நாள். 31.08. 2020
இடம். கம்பம்